சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 8201/ஆ2/2023 நாள். .10.2023

பொருள்: பள்ளிக் கல்வி - அறிவியல் நாடகம் தென் இந்திய அறிவியல் நாடகம் விழா 2023 - 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் அறிவியல் நாடகம் 02.11.2023 (வியாழக்கிழமை) நடைபெறுதல் - அனைத்து வகை பள்ளி மாணவர்கள் பங்கேற்க நடவடிக்கை மேற்கொள்ளக் கோருதல்- சார்ந்து.

பார்வை: சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.45461/எம்/இ2/2023, நாள்.10.10.2023.

.....

பார்வையில் காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, விசுவேசுவரய்யா தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகம் சார்பாக தென் இந்திய அறிவியல் நாடக விழா 2023 மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு 2023 நவம்பர் மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் நடைபெறுவதை முன்னிட்டு, மாவட்ட அளவில் அறிவியல் நாடக போட்டியினை நடத்தி அதில் வெற்றிப் பெற்ற மாணவர்களின் விவரங்களை அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காண் பொருள் சார்ந்து , அனைத்து வகை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 02.11.2023 அன்று மாவட்ட அளவிலான அறிவியல் நாடக போட்டி கீழ்கண்ட பள்ளியில் நடைபெற உள்ளது.

| வ. எண் | நடைபெறும் இடம் | நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| 1. | ஜெய்கோபால் கரோடியா மகளிர் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை - 15. | 02.11.2023 காலை 10.00 மணி |

போட்டிக்கான Main Theme : Science & Technology for the Benefit of Mankind.

Sub-themes:

a) Millets - The Super Food.
b) Food Security.
c) Modern Technology in Daily Life.
d) Current Advances in Health Care.
e) Superstitions in Society.

Scanned with OKEN Scanner

மேற்காண் போட்டியில் அதிகபட்சமாக ஒரு அணியில் 10 நபர்கள் மட்டுமே ( one Director, one Script-writer and 8 artists) பங்கேற்க இயலும். போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களின் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet இல் 31.10.2023 மாலை 5.00 மணிக்குள் பதிவு செய்ய அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே அப்போட்டியில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள செயல்முறைகள் மற்றும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி தங்கள் பள்ளி மாணவர்கள் பங்கேற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு-1. பார்வையில் காண் செயல்முறை நகல்.
2. Google Sheet

30.10.23

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை.

30/10/2023

பெறுநர்

1. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள், சென்னை மாவட்டம்.
2. தலைமையாசிரியர், ஜெய்கோபால் கரோடியா மகளிர் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை - 15. (அறிவியல் நாடக போட்டியினை நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)

நகல்.

1. சென்னை-06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டுநலப்பணித்திட்டம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் , சென்னை மாவட்டம்.
3. உதவி கல்வி அலுவலர்கள், சென்னை பெருநகர மாநகராட்சி.

Scanned with OKEN Scanner

## District Level Science Drama Enrollment

**Enroll in this Google sheet before 31.10.2023 5.00pm (One team only allowed per school )**

| Sl.No. | MANGEMENT Govt/Chennai/ADW/Aided/A I/Matric / All other Boards | Name of the school | No.of Participants (Max of 10 per team ) | Drama theme ( Millets – The Super Food/Food Security/Modern Technology in Daily Life/Current Advances in Health Care/Superstitions in Society) |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| | | | | |

Scanned with OKEN Scanner